**சி.பி.எண்.46/2025** **06.03.2026**

**ம.த.சாட்சி 1 திருமதி. யசோதா குறுக்கு விசாரணை**

நிருபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்த பின்பு தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 1999 முதல் 2017 வரை எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2025ம் ஆண்டு 8 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணத்திலும் 2017 வரை தான் வேலை செய்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். எனக்கு நிர்வாகம் பி.எப். பிடிக்கவில்லை என்பதற்காகவும் குறைவாக சம்பளம் கொடுத்ததற்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நிர்வாகம் எவ்வளவு ரூபாய் குறைவாக சம்பளம் வழங்கியது என்று எனது நிருபண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை. நான் பணியில் இருக்கும் பொழுதும் மற்றும் பணியை விட்டு நின்ற பின்பும் நிர்வாகம் சம்பளம் குறைவாக கொடுத்தது என்று தொழிலாளர் ஆய்வாளர் முன்பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ம.த.சா.ஆ.4ஆனது பி.எப். மெம்பருக்கான பாஸ்புக் அதில் 2010 முதல் 2017 வரை வரவுகள் காணப்படுகின்றன என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் என்றைய தேதியில் பணியில் சேர்ந்தேன் என்பது குறித்த விவரங்கள் எதுவும் காணப்படவில்லை என்றால் காணப்படுகிறது. நான் தாக்கல் செய்த ஆவணத்தில் 2010ல் இருந்து தான் குறிப்புகள் காணப்படுகின்றன தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் சரியாக தான் சம்பளம் வழங்கி வந்தது என்றும் அதனால் தான் நான் பணியில் இருக்கும் பொழுது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவீல்லை என்றும் தற்போது 8 வருடங்கள் கழித்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சம்பள ரசீது மற்றும் வங்கி கணக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நிர்வாகத்திற்கு எதிராக பணிக்கொடை குறித்து வழக்கு தாக்கல் செய்து அதில் சமாதானமாக சென்று நிர்வாகத்திடம் இருந்து பணிக்கொடையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் பணிக்கொடை வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நிர்வாகம் குறைவாக சம்பளம்

அளிக்கிறது என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பளம் குறைவாக நிர்வாகம் வழங்கியது என்று வழக்கு தாக்கல் செய்திருப்பது இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வராது என்றால் சரியல்ல. சட்டக்கருத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கறிஞர் கூறியதின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.03.07 13:12:27 +0530